News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,

'The Morning Star, Diocesan office, Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol:- 152 Jaffna, Friday 25 October 1991 No: 19**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subcription

Island : Rs. 100/-

*For Advertisements*


Apply to:

THE MANAGER

'The Morning Star, Diocesan office, Vaddukoddai

## LEVI SPAULDING 200TH BIRTH ANNIVERSARY

The 200th birth anniversary of the renowned scholar and dedicated missionary to Jaffna the Rev. Levi Spaulding, M.A., D. D. was Celebrated on Thursday the 22nd of August, 1991. Levi Spaulding who was born on th 22nd of August, 1791 in the U. S. was educated at Cornell University where he is reputed to have obtained the highest marks at the final M. A. examination. He belongs to the second batch of American Missionaries who arrived in Jaffna in 1819. Spaulding had a long missionary career in Jaffna up to his death on the 18th of June, 1873. He was among other things, a great Tamil scholar and Lexicographer. He chaired the Bible Translation Committee which produced the Jaffna Tentative Tamil Version in 1850. He was also instrumental in preparing a catalogue of all the Tamil Ola Books Extant. This catalogue includes the writings of Thiruvalluvar, Kambar, Ilango and others.



The 200th birth anniversary was observed at Vaddukoddai on the 22nd of August beginning with the Thanksgiving Service at 8.30 a. m. at the Cathedral Church. The preacher at the service was the Rev. A. A. Paul. The service was followed by a public meeting at the Ottley Hall, Jaffna College. The speakers included Miss C. V. Selliah, Principal, Uduvil Girls' College, Mr. S. Ratnavel and a student from the Levi Spaulding Boys' Home at Vaddukoddai. After a fellowship lunch at the Boys' Home Dining Hall, a cultural programme was conducted at the Ottley Hall, Jaffna College. One of the main attractions was a drama depicting the life and service of Levi Spaulding produced by Mr. Manuelpillai of the Jaffna College staff. Most of the actors were from the Levi Spaulding Boys' Home. All those who viewed this programme were moved by the experience. The Diocese decided to commemorate the name of the Levi Spaulding ten years ago when it established the Boys' Home at Vaddukoddai and named it after him.

## Obituary

### Mrs. A. T. Ariarajah

We are grieved to report of the sudden death of Eilis Selvaranee Ariarajah on the 2nd of September. She is the wife of M. Allan Thambyrajah, Ariarajah of Manipay and presently of Batticaloa. Mrs. Ariarajah was an English Trained Teacher who had retired from service recently. She was an active Church and Social Worker and gave all her time and energy for her Church and community. The funeral took place at the home of the Ariarajahs in Batticaloa and was led by the Rev. Earl P Solomons, the C. S I. Minister at St John's Church, Uranee The Rev. Miss Ariamalar Vythilingam paid a moving tribute to the life and service of the deceased. The Rev. Hugh Canagasabai also took part in the service. The committal at the grave side was done by the Rev. Earl P Solomons along with the Rev. Ariamalar Vythilingam.

### Christian Aid and Bread for the World officers Visit Jaffna

The Rev. Dr. Michael Toylor, Director of Christian Aid, Britain along with Ms. Ingrid Osterman, the Asia Secretary of Bread for the World, Germany visited Jaffna from Thursday the 12th to Monday the 16th Sept. They were the hosts of the Methodist Church and of the Jaffna Diocese of the C. S. I. On Friday the 13th the visitors were received by the Citizens' Committe of Jaffna and they had an opportunity of discussing with them the problems faced by the people. It is hoped that the first hand knowledge they have received of the situation will enable them to present our case to organisations and governments abroad. On Saturday the 14th morning they participated in a seminar from 9.30 to 11.00 a. m. at the Trimmer Hall, Jaffna. At this seminar both Dr. Taylor and Ms. Ingrid Osterman explained the objectives of their organisations and the broad concerns they have in development. They stressed that their organisations are concerned about the questions of justice, poverty population and the problems of the environment.

On Saturday and Sunday the visitors were at Vaddukoddai and saw some of the development projects, institutions and rehabilitation programmes undertaken by the Diocese. They left Jaffna in the morning of Monday the 16th.

Visits from such important officers of well recognised and influential organisations are a great encouragement to the people in the North as they undergo the worst form of oppression and sufferings in the long history of colonial domination of over five hundred years.

### Dr. D. Preman Niles New General Secretary, Council for World Mission

We are happy to report that Dr. D. Preman Niles, who was till recently Director of the Commission for Justice, Peace and the Integrity of Creation at the World Council of Churches has been appointed Genaral Secretary of the Council for World Mission in London from July this year.

The Council for World Mission is the former London Missionary Society, which was reconstituted some years ago with greater participation at the decision making level from the former mission areas now functioning as independent churches throughout the world. The C. W. M. probably is the most progressive in this policy. Dr. Niles succeeds the Rev. Dr. Christopher Duraisingh who has been appointed Director of the Commission for World Mission & Evangelism at the World Council of Churches, Geneva.

Both the Church of South India and the Church of North India are member churches of the C. W. M.

Preman Niles is the elder son of the eminent ecumenical leader D. T. Niles.

### Professor A. Thurairajah re-elected Vice-Chancellor, Jaffna University

Professor A. Thurairajah, we are happy to report has been re-elected for another term of three years as Vice-Chancellor of the Jaffna University. Professor Thurairajah who is an engineer by profession was Head of the Engineering Faculty at Peradeniya before he came to Jaffna as Vice-Chancellor. It is largely due to Professor Thurairajah's dedication, commitment and perseverance in steering the affairs of the Jaffna University that the University continued to function under the very trying circumstances of the last few years. We are confident the University will continue from strength to strength under his leadership.

### Mission Hospitals felicitate winner of Florence Nightingale Award

As reported earlier, Miss Bala Chithamparanadarajah, a nurse at the Green Memorial Hospital was granted the Florence Nightingale award for 1989 / 90 by the International Committee of the Red Cross, Geneva. The award was formally made to her at a function organised by the Jaffna Branch of the Ceylon Red Cross Society at the Green Memorial Hospital, Manipay. The two Mission Hospitals however decided to felicitate Bala at a special function organised by the staff of Green and McLeod Hospitals. This was held on Saturday the 27th of July at Willis Pierce Nursing School lawn at Manipay. Dr. Nachchinakinian, President of the Jaffna Branch of the Red Cross and its Secretary Mr. S. Sivanandarajan and former President of the Jaffna Red Cross Dr. Theiventhiram were also present. Mr. Grimm, representative of the I. C. R. C. in Jaffna spoke at this meeting congratulating the award winner.

Two nurses, one from McLeod and the other from Green Memorial Hospital spoke felicitating the award winner and said she had brought much credit to nurses at these Hospitals throgh her meritorious service. The Diocese made a cash gift to the award winner and also gifts to the Nursing, Para Medical and Minor staffs at the Hospitals. Dr. Joy Canagarajah, the Medical Superintendent of McLeod Hospital, Inuvil was the Chief Speaker on the occasion. She, while congratulating Bala Chithamparanadarajah said that nurses at the Mission Hospitals can be proud of the high standards of nursing and their high sense of duty which has earned this award for one of the staff of our Hospitals.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
Estd. 1841
மலர் 152 25 - 10 - 1991 இதழ் 19

அறிவுரைப் பகுதி :

## செய்தற்குரிய உதவியை உடனே செய் !

ஒருவர் உதவியை வேண்டி உம்மிடம் வரும்போது, உம்மால் செய்ய முடியும் உதவியாயின் உடனே செய்து விடுவது நல்லது. அவ்வுதவியை உம்மால் செய்ய முடியாதாயின், உம் முடியாமையை உடனே அவரிடம் தெரிவிப்பது நல்லது.

ஆனால், சிலர் அவ்வாறு செய்வதில்லை. தம்மால் முடியக்கூடிய உதவியையும், காலந்தாழ்த்திக் கடத்திக் கொண்டே செல்வர். பல நாள் அலையவிட்டு, கடைசியில் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அனுப்புவர். இவ்வாறு செய்வது முறைகேடான செயல்.

செய்தற்குரிய உதவியை உடனே செய்காலத்தால் செய்த நன்மை பெரிது. அவ்வுதவியைப் பெற்றவர்க்கும் பெருநன்மை ஏற்படும். செய்ய முடியாததை இல்லை என்று சொல்லி விடுத்திருந்தால் அந்த நபர் வேறொருவர் வழியாகவோ, அல்லது தன் முயற்சியாகவோ, தான் நினைத்ததை முடித்திருப்பார்.

அவ்வாறின்றி அவரை நம்பச் செய்து கிடைக்குமென்றே உறுதி கொள்ளச் செய்து இறுதியில் முடியாத ஏமாற்றத்தையும் துயரையும் தரும். இவர் நிலை 'இலவு காத்த கிளி போல' என்னும் பழமொழிக்கு ஒப்பாகும்.

ஒருவன், தன் வீடு தீப்பற்றிக் கொண்டது என்று அலறிக் கொண்டு ஓடி வந்து தன் அயல் வீட்டுக்காரனிடம் சொல்கிறான்.- அவனோடு ஓடிப்போய்த் தீயினை அணைக்க வேண்டும். அல்லது 'நீ ஓடிப்போய் அணை, நான் விரைவில் வருகிறேன்' என்றாவது கூற வேண்டும் - அதனை விடுத்து, "ஐயோ உன் வீடா தீப் பற்றிக் கொண்டது" என்று கூறி அவன் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுது அவனைப் போக விடாமல் செய்தால், அது அவன் வீட்டை எரியாமல் காக்க வேண்டும் என்னும் எண்ணம் உடையவன் செயலா ? சிந்தித்துப் பாருங்கள், அந்த வீடு குறையில்லாமல் எரிந்து போகட்டும் என்னும் எண்ணமுடையவனின் வஞ்சகச் செயலே இது :- அச்செயலைப் போன்றதே காலத்தால் செய்யாத உதவிகள்.

ஒருவன் நேர்மைக்கு மாறுபட்ட உதவியை உன்னிடம் கேட்டு வந்தால் - அவனிடம் உடனே "என்னிடம் இருந்து இந்த உதவியை எதிர் பாராதே. என் மனச் சாட்சிக்கு இது ஒத்து வராது. நீ கேட்பது முறையற்றது" என்று வெளிப்படையாகச் சொல்லிவிடு. அவன் உடனே திரிந்தாவிடினும், காலங் கடந்தாவது திருந்தும் வாய்ப்புண்டு. தான் செய்ய நினைத்தது தவறு என்று உணர்ந்த பின்னர் திருந்துவான்.

இந்நாட்களில், தம்மால் முடியாச் செயலை முடியும் என்று கூறுவோரும், தம்மால் முடியும் செயலை முடியாது என்று கூறுவோரும் பெருகியுள்ளனர் ! இந்நிலை நம் சமுதாயத்தை ஏன் நம் நாட்டையே அலைக்கழிக்கும் நோய் போலப் பெருகிவிட்டது. — இதனால் தீயவர்களும் எத்தர்களும் பொலிவுடன் உலா வருகின்றனர். நல்லவர்கள் நலிவு அடைகின்றனர்.

'**பாண்டியன் நன்மாறன்**' என ஒரு அரசன் இருந்தான். அவனை சூலூர் மூலங்கிழார் என்னும் புலவர் சந்தித்தார். அவனிடம் தன் குடும்ப நிலையை எடுத்துரைத்தார் தக்க பரிசில் வழங்க வேண்டும். என வேண்டினான். அவ்அரசன் கொடுக்க முடியாது என்று கூறவில்லை. கொடுக்க முடிந்ததை உடனே வழங்கவும் இல்லை. புலவர் பலநாள் காத்திருந்தார் அரசன், பரிசில் வழங்காமல் நாளைக் கடத்திக் கொண்டே சென்றான். புலவரால் மேலும் அங்கே காத்துக்கொண்டிருக்க முடியவில்லை. "தரமுடியாது" என்று கூறவும் அரசனுக்குத் துணிவு வரவில்லை. இந்த இக்கட்டான நிலையில் புலவர், உள்ளம் வெதும்பியவராய்ப் பின் வருமாறு கூறுகிறார் :-

"கொடுக்க முடிந்த பொருளை முடியும் என்று சொல்லிக் கொடுப்
பதும்
தம்மால் கொடுக்க முடியாப்
பொருளை முடியாது என்று
சொல்லி மறுப்பதும்
ஆகியவை முயற்சியாளரால்
போற்றிக் கொள்ளக் கூடிய
செயல்களேயாம்

ஆனால், தன்னால் முடியாததனை முடியும் என்பதும் முடிவதனை முடியாது என்று மறுப்பதும் ஆகிய இரண்டும் உதவி கேட்டு வந்தவர்க்கு அல்லலையும் கொடுப்பவர்க்குப் பழியையும் தரும் என்றார்.

புலவர் இவ்வாறு தாம் அடைந்த ஏமாற்றத்தை மறைக்காமல் வெளிப்படுத்தினார். அவனை வழிப்படுத்திப் பொருள் பெற வேண்டும் என்பது அவர் எண்ணம் அல்ல. அவன் செய்த தவறை இடித்துக் காட்ட வேண்டும். அதனால் அவன் திருந்தி வாழ வேண்டும் என்ற கருத்துடன் கூறினார்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது சான்றோர் வாக்கு. அது போல் - "யான் பெற்ற துன்பம் இவ்வுலகு பெறாதொழிக" என்பதும் பெரியோர் வாக்கே. அதன் வெளிப்பாடே ஆலூர் மூலங்கிழார் பாட்டாகும். அவர் கூறுகிறார்.

"ஒல்லுவது ஒல்லும் என்றலும்
யாவர்க்கும்
ஒல்லாதது இல்லென மறுத்தலும்
இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்
மைப் பாலே"

செய்யத்தக்கது இது என்று கூறிய அளவில் நிற்காமல் - "செய்யத் தகாது இது" என்றும் வலியுறுத்த வேண்டும் என்பதே புலவர் கருத்தாகும்.

சூலூர் மூலங்கிழார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமே இவ்வாறு வலியுறுத்தினார். தம் பட்டறிவில் பட்டதை மறைக்காமல் உரைத்தார். இதுவே வாழ்வு நெறி என்பதை உணர்ந்து கடைப்பிடித்து வாழவேண்டும்.

---

### மரணம்

### திருவாளர் வேலுப்பிள்ளை டானியல் செல்லத்துரை

வறணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பண்டத்தரிப்புத் திருச்சபை அங்கத்தவருமாகிய ஆசிரியர் திருவாளர் "வேலுப்பிள்ளை டானியல் செல்லத்துரை" அவர்கள் 15 . 07 . 1991 சனிக்கிழமை தமது 76 வது வயதில் மறுமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னாரின் பிரேதசேம வீட்டாராதனை சேகரக்குரு கனம் கலாநிதி. S. ஜெபநேசன் அவர்களினால் சபைப் போதகர் திருமதி, நம்மி தம்பியப்பா அவர்களின் உதவியுடன் நடாத்தப்பட்டது. ஆராதனையின் முன்னர் ஆசிரியர் அவர்களின் நற்குண நற்பண்புகள் பற்றியும், பராப்பன்பற்று அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆசிரியர் அவர்கள் உதவி ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும், 28 ஆண்டு காலம் ஆற்றிய சிறந்த சேவை பற்றியும் அவரது தன்னலமற்ற சேவையினால் பின்தங்கியிருந்த அக் கிராமம் பெற்ற நன்மைகள் பற்றியும், பலர் தற்போது அக்கிராமத்தில் கல்விமான்களாக விளங்குகின்றார்களென்றும் பலர் கிறிஸ்துவை [illegible] ஏற்று கிறிஸ்தவர்களாக விளங்குகின்றார்கள் என்றும் ஆசிரியரது பழைய மாணவனாகிய திருவாளர் தங்கத்துரை பாராட்டிப் பேசியதுடன் தன்னையும் அறிவுடையவனாக்கிய பெருமை ஆசிரியரைச் சாரும் என்றும் குறிப்பிட்டார். பாடசாலைக்குச் சமூகம் கொடுக்காத பிள்ளைகளின் இல்லங்களுக்குச் சென்று அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வரும் வாஞ்சையுடையவராக விளங்கினார் என உருக்கமாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஆசிரியர் அவர்களின் சமூக சேவை பற்றியும், பண்டத்தரிப்பில் தற்பொழுது சிறந்து விளங்குகின்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் என்றும், பண்டத்தரிப்பில் ஆர்வமுடைய விவசாயியாக விளங்கிக் கிராம மக்களையும் விவசாயத்தில் ஈடுபடச் செய்து முன் மாதிரியாக விளங்கினாரென்றும், 1957 - ம் ஆண்டு அரசாங்கத்தினால் வட மாகாணத்தில் சிறந்த விவசாயியாக விளங்கியமையைக் கௌரவித்து இரண்டாம் பரிசு வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுத் திருவாளர். K. இராசதுரை அவர்கள் [illegible] பேசினார்.

தொடர்ந்து ஆராதனை ஆரம்பமாகியது. ஆசிரியர் அவர்கள் உறுதியான விசுவாசமுடைய கிறிஸ்தவரென்றும், ஆலய வழிபாட்டிலும் ஆராதனையிலும் மனைவி, மக்களோடு பங்குபற்றி முன்மாதிரியாக விளங்கினாரென்றும், திருச்சபைக் காரியதரிசியாகவும், தனாதிகாரியாகவும், சபாசங்க பிரதிநிதியாகவும் விளங்கித் திருச்சபை வளர்ச்சியில் கரிசனையுடையவராக விளங்கினார். பிரசங்கம் செய்வதிலும், சிறப்பு வைபவங்களில் சிறந்த பேச்சாளராகவும், தலைமை வகித்துச் சிறப்பிக்கும் ஆற்றலுடையவராகவும், பண்டத்தரிப்பு Y.M C.A யின் மூத்த உறுப்பினராகவும், பொருளாளராகவும் இறுதி வரை பணியாற்றினாரென்றும் திருமதி வினாசிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்.

சேகரக் குரு கனம் கலாநிதி S. ஜெபநேசன் அவர்கள் மரணம் மக்களுக்கு நிச்சயமுடையதென்றும் வாழ்வின் ஆரம்பம் முடிவு அல்ல என்றும் குறிப்பிட்டு, தனது தந்தையார் ஆசிரியர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் பராயன்பற்றுப் பாடசாலையில் தமையாசிரியராக இருந்த காலத்தில் ஆசிரியர் செல்லத்துரை அவர்கள் உதவியாசிரியராகப் பக்க பலமாக இருந்து தோளோடு தோள் நின்று சேவையாற்றினார் என்று குறிப்பிட்டுப் பிரசங்கம் செய்து இறைவனுக்கு ஆசிரியரின் வாழ்வுக்காகத் துதி செலுத்தி இறைவனை வேண்டுதல் செய்தார்.

மகா கனம் அத்தியட்சர் D. J. அம்பலவாணர் அவர்களின் ஜெபத்துடனும், ஆசீர்வாதத்துடனும் ஆராதனை நிறைவு பெற்றது.

சேமக்காலை நல்லடக்க ஆராதனையை கனம் A. ஜெயக்குமாரன் அவர்களின் உதவியுடன் சேகரக்குரு கனம் கலாநிதி. S. ஜெபநேசன் அவர்களால் நடத்தப்பட்டு, மகா கனம் அத்தியட்சகர் D. J. அம்பலவாணர் அவர்களின் ஆசீர்வாதத்துடன் நல்லடக்க ஆராதனை நிறைவேறியது.

ஆசிரியர் அவர்கள் காலஞ்சென்ற திருமதி கிறேஸ் நேசம்மா அவர்களின் அன்புக் கணவரும், திருமதி சகுந்தலாதேவி சின்னையா (கனடா), திருமதி சறோஜினி தேவி மூர்த்தி (கனடா), திரு. ஜெசிங்கம் (பண்டத்தரிப்பு), காலஞ்சென்ற திரு ஜெயபாலன், கனம் ஜெயநேசன் கொழும்புத் திருச்சபைக் குரு. திரு ஜெயரூபன் (கனடா), திரு. ஜெயரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு யோசவ் சின்னையா, திரு நாராயணமூர்த்தி, திருமதி மேரி தங்கரட்ணம், திருமதி சுசிலாதேவி, திருமதி சாந்தி ஜெயநேசன், திருமதி விஜயகுமாரி, திருமதி சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

ஆசிரியர் அவர்களின் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் பலர் சமூகம் கொடுத்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

---

### திருச்சபை சமயக்கல்வி பொறுப்பாளர்

நமது ஆதீனத்தின் கரும கர்த்தர் குழு திருமதி தயா தியாகராஜாவை அக்டோபர் மாதம் 1-ம் திகதி தொடக்கம் ஆதீன சமயக்கல்விப் பொறுப்பாளராக நியமித்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரகை ஒளி

உலக முழுவதும் ஆளக்கருகும் அரசர் அதற்குரிய காலத்தையே எதிர்பார்த்து இருப்பர்.

## எங்கள் கருத்து

### 175 ஆம் ஆண்டு நிறைவு விழா

அமெரிக்கன் மிஷனெரிமார் ஈழ நாட்டில் தம் திருப்பணியைத் தொடக்கிய 175 ஆம் ஆண்டு நிறைவை, நமது ஆதீனம் மிக்க விமரிசையாகக் கொண்டாடிற்று. 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது' என்ற முதுமொழிக்கிசைய நன்றி தோய்ந்த உள்ளத்துடன் கொண்டாட்டங்கள் நிறைவேறின.

நமது பேராயர் அவர்கள் வகுத்த விரிவான திட்டத்தின்படி, இப்பெருவிழா ஆதீனச் சபை வட்டாரங்களில் தனிவிழாவாகக் கொண்டாடப்பட்டது. சபைகள் அனைத்தும் அமெரிக்கன் மிஷன் வரலாற்றை நன்கு அறிந்து, அவர்கள் செய்து முடித்த பெரும் பணிகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்ததுவும், யாழ் ஆதீனம் - மிஷனரிமார் தொடக்கிய பணியைத் தொடர்ந்து பலவிடங்களில் செய்வதோடு இப்பணியை விரிவாக்கியதையும் அறியும் வாய்ப்பை நம் சபையார் பெற்றனர்.

இவ்விழா தொடர்ந்து உறுதியாகப் பணியாற்றும் உந்துதலை நமது சபைகளுக்கு அளித்துளது என்பதே நமது நம்பிக்கை. அமெரிக்க மிஷனரிமார் ஆற்றிய தொண்டுகள் பல அறியாமை என்னும் இருளை நீக்கி, அறிவொளியை ஏற்றி வைத்த அத்தீபத்தை மென்மேலும் நாடெங்கிலும் பரவி ஒளிரச் செய்யத் தம்மைக் கருவியாக இறைவனிடம் ஒப்படைக்க ஏராளமான வாலிபர் முன் வந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் மிஷனரிமாருக்காக நன்றி செலுத்தும்போது நாமும் மிஷனரிமாராக ஆக்கப்பட வேண்டும் என்று நம்மை ஒப்படைக்க மகிழ்வுடன் முன்வர வேண்டும் எல்லார்க்கும் அருட்செய்தி அறிவிக்க வேண்டும். வல்ல கர்த்தர் சொன்ன நெறி காக்க வேண்டும். வன்செயல்கள் சீர் கேடுகள் மறைய வேண்டும். வறுமை, பசிப்பிணிகள் ஒழிய வேண்டும். நன் செயல்கள் நாட்டினிலே திகழ நம்மால் இயன்றளவு ஆவியரின் துணையுடன் முயல வேண்டும் அடிமைகள் விடுதலை அடைய வேண்டும். மிடிமை அகற்றும் சேவை ஓங்க வேண்டும் இப்பணியில் ஈடுபடும் நமக்கு என்றென்றும் தளராத உள்ளம் வேண்டும். எடுத்ததை நிறைவேற்றும் உறுதி வேண்டும். நம் சிந்தனையில் செயலில் தியாகம் வேண்டும். சேவை எல்லாம் பிறர்க்காகச் செய்ய வேண்டும். இதற்காகவே நாம் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டுள்ளோம்.

இவ்விழா இறுதியாக நமக்கு அளித்த செய்தி, நமது பணிகளுக்கு வேண்டிய பணவுதவியைப் பிறரிடம் முழுவதுமாக எதிர்பார்க்காமல், படிப்படியாக நாமே, நமது வருமானத்தை நிறைவாக்க வேண்டும் என்பதே. இதனையே நமது பேராயர் கருத்திற்கொண்டு ஒவ்வொரு சபையும் தம்மால் இயன்றளவு கொடுத்துதவ வேண்டும் என அழைப்பு விடுத்து அதற்காகப் பல தொண்டர்கள் சபைகளைச் சந்தித்து வருகின்றனர். இது ஒரு குறிப்பிடத்தக்க செயல். கடந்த இருபது ஆண்டுகளில் நமது ஆதீனம் பல துறைகளில் தன் நிறைவு பெற்றுளது. "வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்" என்பதை உணர்ந்து, நமது ஆதீனம் செய்து வரும் திருப்பணிகளுக்காக தாராளமாய்க் கொடுக்க முன் வாருங்கள்.

"கொடுப்பதற்கு உள்ளத்தில் ஆர்வம் இருந்தால்,
தன்னிடம் உள்ளதற்கு ஏற்றபடி எவ்வளவு
கொடுத்தாலும் அது இறைவனுக்கு ஏற்புடையதாகும்".

## "வைத்திய கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன்"

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" எனப் பாரதி பாடினான். நம் தமிழ் மொழி இனிமை மட்டுமல்ல செழுமையும் உடையதென எடுத்துக் கூறும் வகையில் தமிழ்த் தாய்க்கு விஞ்ஞானமாம் அணிகலன் சூடிச் செழுமைப்படுத்தியவரே வைத்திய கலா நிதி கிறீன் ஆவர். அமெரிக்க மிஷன் வைத்திய சேவையில் இலங்கை வந்த டாக்டர் கிறீன் அவர்கள் இற்றைக்கு நூற்றிருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் தமிழில் விஞ்ஞானம் கற்பிக்க எடுத்த முயற்சியே, இன்று நாம் தாய் மொழியில் விஞ்ஞானம் கற்கவும், வளர்க்கவும் மூலகாரணமாக விளங்குகின்றது எனலாம்

1819 ஆம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க மிஷன் வைத்திய சேவையில் டாக்டர் ஸ்க்கட்டர், டாக்டர் நாதன் உவாட் ஆகியோரைத் தொடர்ந்து 1847 ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் ஆறாம் திகதி இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்த டாக்டர் கிறீன் அவர்கள் சுதேசிகள் மத்தியில் மேலைத்தேய வைத்தியர்களை உருவாக்க வேண்டுமென்ற இலட்சிய உணர்வோடு செயலாற்றினார். இலங்கையின் முதலாவது வைத்தியப் பாடசாலையினை நிறுவியதோடு, தமிழ் மொழியில் விஞ்ஞானமும் மேலைத்தேய வைத்தியமும் வாழ்ந்து வளரும் வண்ணம் அதனை வளம்படுத்திய மேதை கிறீன் அவர்கள் ஆக்கிவைத்த கலைச் சொல்லாக்க, மொழி பெயர்ப்புக் கொள்கைகள் இன்றைய கல்வியியலாளர்கட்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாக விளங்குகின்றன.

அமெரிக்காவிலுள்ள 'மசாசூசெட்ஸ்' மாநிலத்திலுள்ள 'வேர்செஸ்டர்' எனும் இடத்தில் வில்லியம் கிறீன் தம்பதியரின் பன்னிரண்டு புதல்வர்களில் எட்டாவது புதல்வராக 1822 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் நாள் தமிழுலகம் உய்ய அவதரித்தார். தமது பதினோராவது வயதிலேயே தாயின் அரவணைப்பினை இழந்த மேதை அவர்கள், பத்தொன்பதாவது வயதிலே வண டாக்டர் வர்கீஸ் என்பாரிடம் ஓர் சாதாரண எழுதுவினைஞராகத் தொழில் செய்தாராயினும் அன்னாரது உள்ளம் வைத்திய விஞ்ஞானத்தின் பால் மிகவும் அவாவி நின்றது. வேலைப் பழுவின் மத்தியிலும் கிடைத்த ஓய்வு நேரங்களில் வைத்திய நூல்களைக் கற்று வந்த கிறீன் அவர்கள் அவ்வருடம் ஒக்டோபர் மாதமே முழுநேர வைத்தியக் கல்வியினை மேற்கொண்டு மூன்றாண்டுகளில் வைத்தியக் கல்வியில் தேறி வெற்றிகரமான டாக்டராக வெளியேறினார்.

அக்காலத்திலே இலங்கையில் மிஷன் சேவை புரிந்து அமெரிக்கா திரும்பிய மூத்த மிஷனறியார் மூலம் நமது நாட்டைப் பற்றியும் எமது மக்களின் தேவைகளையும், சேவை செய்வதற்கு மலிந்திருந்த வாய்ப்புகளைப் பற்றியும் கேள்வியுற்றதன் விளைவாக அன்னாரின் உள்ளத்திலே தாம் ஓர் மிஷன் சேவையாளராக வேண்டுமென்ற அவர் உதித்தது. அன்னாருக்கு இளமையிலேயே கைவந்த சகிப்புத் தன்மை, விடாமுயற்சி, ஆத்மீக உணவு முதலாய அருங்குணங்கள் அவர் ஓர் சிறப்பான மிஷன் சேவையாளராக மிளிர வழி வகுத்தன எனலாம். "யான் எங்கு தொண்டாற்ற வேண்டுமென்று இறைவன் விரும்புகிறானோ அங்கேயே நான் உள்ளேன்" என்ற ஆத்ம திருப்தியோடு வட்டுக்கோட்டையில் இருந்த சிறு வைத்திய சாலையினை நடாத்தி வந்த காலை அன்னாரின் பெயரும் புகழும் பரவும் வகையில் ஓர் சம்பவம் நடந்தது.

அக்காலத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய திரு. முத்துத்தம்பி என்னும் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றில் புலமை வாய்ந்த பண்டிதர் ஒருவர் கடுமையாக நோய் வாய்ப்பட்டு, சுதேச வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலையில் அவதியுற்றிருந்தார். அப்போது சிலர் மேலைத்தேய வைத்தியர் கிறீன் அவர்களிடம் நோயாளியைக் காண்பிக்கலாமென யோசனை தெரிவித்தனர். பலத்த கருத்து மோதல்களுக்கும், நீண்ட ஆலோசனைக்கும் முடிவில் கிறீன் வைத்தியரை அழைத்தபோது எம் டாக்டரவர்கள் நோயாளியைப் பரிசோதித்து அவர் வயிற்றில் ஓர் சத்திர சிகிச்சை நிகழ்த்த வேண்டுமெனக்கூறி, நோயாளியின் சம்மதத்துடன் சிகிச்சையினை மேற்கொண்டார். சுதேச வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளி பூரண குணமடைந்ததும் கிறீன் வைத்தியரின் புகழ் மக்கள் மத்தியில் அதி வேகத்துடன் பரவத் தொடங்கியது. "டாக்டர் நோயாளியின் குடலை வெட்டி எடுத்துச் சரி செய்த பின்னர் மீண்டும் பொருத்தினார்" என மக்கள் பேசிக்கொண்டதிலிருந்து அக்காலத்தில் நிலவிய அறியாமையையும், மக்களின் மேலைத்தேய வைத்திய அறிவுப் பற்றாக் குறையினையும் நாம் காணலாம். இத்தகையதோர் சூழ்நிலையில்தான், ஆங்கிலத்திலே கூட விஞ்ஞானம் சிறப்புறப் பரவியிராத அக்காலத்திலே தமிழ்மொழியில் விஞ்ஞானம் வளர்க்க அடியெடுத்து வைத்தவர் நம் முன்னோடி கிறீன் அவர்கள்.

1848 ஆம் ஆண்டு மாசி மாதம் வட்டுக்கோட்டையிலிருந்த சிறு வைத்தியசாலையினை மானிப்பாய்க்கு இடம் மாற்றி அங்கு தாபித்த சிறு வைத்தியசாலையே இன்று "கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை" என வளர்ந்து நிற்கின்றது. மானிப்பாயில் இலங்கை கண்ட முதலாவது வைத்தியப் பாடசாலையினை நிறுவி ஆரம்பத்தில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் தரத்திற்கிணையாக ஆங்கிலத்திலே பாடநெறிகளை மேற்கொண்டார். அன்னாரிடம் பயிற்சி பெற்ற முதற்றொகுதி மாணவர்கள் 1850 ஆம் வருடம் வைத்தியர்களாக வெளியேறிய பின்னர்தான், யாழ்பாணத்திலிருந்த (Friend - in Need Society) வைத்தியசாலை உயிர் பெற்றதெனலாம். இவ் வைத்தியசாலையே தற்போதைய பொது வைத்தியசாலையின் (பெரியாஸ்பத்திரி) முன்னோடியென்பதும், டாக்டர் கிறீன் அவர்கள் இவ் வைத்தியசாலையின் கௌரவ சத்திர சிகிச்சையாளராயிருந்ததோடு அதன் வளர்ச்சிக்காகத் தம் உழைப்பினை அர்ப்பணித்தவரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ விசுவாசமும்.........

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆனால் தெய்வத்தின் வார்த்தை எப்படியாக தம் வாழ்வில், வேலையில் உந்துகிறது என பெருமைபடுபவர்களும் உளர்.

வேதாகம கருத்தின்படி, இறைவனின் படைப்பின் உச்சக்கட்டமான மனிதன் இருதன்மை உள்ளவன். அவன் மண்ணிலிருந்து உருவாகியதால் (ஆதி 2:7) இயற்கையை சார்ந்தும், அதே வேளை தேவனுடைய சாயலாய் சிருஷ்டிக்கப்பட்டதால் (ஆதி 1:27) இயற்கைக்கு மேற்பட்டும் இருக்கிறான். அதாவது அவன் சரீர அமைப்பு, ஏனைய பிராணிகளுடன் ஒப்பிடப்பட்டாலும், சொந்த ஆளுமை உள்ளவனாயும், கடவுளோடும் வேறு மனிதரோடும் உறவு வைக்கவும் கூடும். மேலும், பொறுப்புடன் இந்த பூமியை பராமரித்து, அதனை குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டியும் உள்ளான்.

மேலும், கடவுளோடு ஓர் சக தொழிலாளியாக பூமியை ஆராய்ந்து அபிவிருத்தி செய்து, கரிசனையை காட்ட மனிதன் அழைக்கப்பட்டுள்ளான். மனிதனும், இயற்கையும் கடவுளின் ஒழுங்கையும், அறிவையும் எங்கும் பிரதிபலித்து, அவரது சிருஷ்டிகள் என்ற அடையாளம் உண்டானதினால் விஞ்ஞான அறிவுக்கு இடமேற்படுகிறது.

மனிதனின் சுயசிந்தனை, சொந்த ஆளுமை, கடவுளுடனான உறவு யாவையும் பழுதடையச் செய்ய ஆவலுன் பாவம் தொழிற்பட்டாலும், இரக்கமுள்ள கடவுளின் கிருபை அவரை அறியாதவர்களிற்கு கூட நன்மையும் உண்மையுமாயிருக்கிறது. ஆனாலும், மனிதராகிய எம் அறிவு குறைவானதே. இயேசு கிறிஸ்துவின் ஆளுமையின் கீழ் நீதி நிலவும் புதிய பூமியும் புதிய வானமும் (வெளி 21:1, ஏசாயா 11) பூரணமடையும் இறுதி நாள் வரை விஞ்ஞானத்திலோ வேறெதிலோ பூரண அறிவு எமக்கு கிட்டாது. எனவே, படைத்த தெய்வத்தை ஆராதிக்கும், ஆராதனையாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் மாறட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL

### Let Us Safeguard the Foundation

"Let us safeguard the foundation" was the title of an editorial written in one of the Jaffna Dailies in connection with 175th Anniversary of the American Ceylon Mission. In his impressive essay the Editor said by, their educational enterprise the American Missionaries laid the solid foundation for the economic, social, scientific and cultural advancement of the Tamil people. Since education had been the prime source of our advancement the Editor argues it is the duty of every citizen to safeguard this foundation with all his might.

There is every reason to believe that the Missionaries of the ABCFM made the biggest contribution to the progress of this part of the Island. As A. Vimalachandra puts it.

"The American passion for Education is a logical out growth of their background in the enlightenment; like their contemporary Jefferson they believed that Education was the only avenue to all forms of progress and that social and economic development went hand in hand with growth of the spirit"

"In the plan" for the College, Daniel Poor and his colleagues wrote "knowledge is power," "This as a maxim is so justly celebrated so steadily kept in view by the philosopher and statesman is not less practical or important to the Christian philanthropist. When those who are engaged in ameliorating the conditions of their fellow men and have knowledge or means of disseminating knowledge they have the power of doing good".

With this firm conviction the missionaries established their educational institutions. As early as 1823 the American Missionaries had given to Jaffna a comprehensive system of Education with elementary schools, secondary schools and a university college.

But it may be pointed out that the Tamil people also had an equally big passion for Education.

The literary effusions of the Tamil people which had been studied by generations over thousands of years glorify the learned man.

As beggars 'fore the rich the learned to their guru bow;
The learned are the high unlearned are the low.
— Thirukural

Beauty of Locks, beauty of circling garments.
Folds beauty of saffron tint.
These are not beauty true.
Integrity of soul that brings the conscience peace is learning gift that only beauty is true"
Naladiyar

When the American Missionaries arrived in Jaffna in 1816 the parish school system of the Ducth had collapsed. But there were native verandah schools in which the children were studying. The Jaffna society was also in possession of a large number of OLA manuscripts. Native Medicine, Astrology, Arithmetic and Poetics were studied, with serene joy.

Since the Jaffna society glorified the learned man, Jaffna became a very salutory field for the missionary activities. At the beginnig the Missionaries found it easier to establish schools in Tellipallai a village in Valigamam North. We cannot deny the fact that this village had been an important centre of learning from time immemorial.

The ongoing civil — war and the consequent disturbances have compelled the Editor of the Tamil paper to make a plea for the safety and security of the Educational foundation.

No doubt Education had been one of the important assets of the Tamil people. The Educational system of the land had enabled the people to migrate to affluent countries and get lucrative jobs. But the homeland remained poor and Jaffna became the land of money order ecomomy.

The missionaries in the fifties of the past century discovered the fallacies in our educational thought. They wrote.

"We have heard it affirmed by the biggest Tamil authority in the district that no education is valued by the people except in the English language; that the value placed upon that languge is simply as a means of acquring wealth, office and influence - and not for the purpose of reading English books, and so gaining access to the fountains of English knowledge"

Dr. S. F. Green a very resourceful missionary who came here in 1847 was very careful not to encourage the "natives" in mistaking Westernization for civilization. He found occasion to say,

"I begin to think that the change here will be from a waist cloth to pants, from a scarf to a coat, from a turban to a hat, from vegetarianism to carnivorism, from hut to a house, and so on till many while yet unchristianized may be denationalized. I would rather here see Christian Hindus than Hindus Europeanized"

There in not the slightest doubt that many of the probems we are facing today are caused by our Philosophy of Education.

Foundation has to be safeguarded but at the same time a critical evaluation of the values inculcated by the system of education is also very vital. The aim of Education should be correct.

### Harriet Winslow Girls' Home Tenth Anniversary

The Harriet Winslow Girls' Home at Pandateruppu marked the 10th anniversary of its establishment on Monday the 12th of August this year. The celebrations began with a solemn service of thanksgiving at the Pandateruppu Church. The service was conducted by the Worker in Charge of the Church Mrs. A. Rammi Tampiyappa. The Rev. Dr. S. Jebanesan preached the sermon. The service was followed by a full Day programme at the Girls' Home which included a cultural programme of music and drama which reached high standards.

Mr. S. Ratnavel who was associated with the Home from its very inception both as Manager and as the Chief Architect of its building programme was honoured with a "Pon Aadai" at the function.

The Home now has more than 80 children from classes ranging between Year V to the Advanced Level. It is encouraging to know that a few of its students are hoping to enter the University this year. Others who have left the Home are now engaged as teachers.

The Home which began with modest accommodation at the former Pandateruppu Parsonage has now an attractive three storey block housing the main dormitory and the Study Hall cum Dining Hall. The Home was named after the pioneer American missionary Mrs. Harriet Winslow, who as founder Principal of the Uduvil Girls' College pioneered in the field of women's education.

### Christa Seva Ashram celebrates 52nd Anniversary

The Christa Seva Ashram marked its 52nd anniversary with a Thanksgiving Holy Communion Service at the Ashram Chapel at 6.30 a. m. on Wednesday the 21st of August. The main programme of that day was the public meeting at 3.00 p. m. also in the Chapel of the Ashram. This year the services had a unique backdrop in that the Ashram was full of refugees who have pitched their tents in the campus. At the public meeting presided over by the Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the Jaffna Diocese of the C. S. I., the Bishop also released a full length biography in Tamil on the life of the founder of the Ashram the Rev S Selvaratnam, written by the Rev. D. R. Ambalavanar. A review of this biography will appear in our columns in a later issue. The main speaker at the public meeting was the Rev. K. P. Govindarajah, the Head of the Methodist Church in Jaffna. The Rev. Govindarajah in his address said that while both Christians and the rest of the community were undergoing untold hardships all these days, for him from a spiritual point of view it was the time of the greatest experience of divine grace and guidance. Our troubles do draw us closer to God who carries out his purposes despite man's revolt and rebellion. A fellowship tea followed the service.

### MEMORIAL SERVICE

A service in memory of the late Mrs. Lily Rasamma Kanapathipillai was held on the 16th of June at 3.30 p. m. at the Cathedral Church, Vaddukoddai. The service was conducted by the Rev. G. D. Anandarajan, Pastor of the Church. Dr. Joy Canagarajah, the Medical Superintendent, McLeod Hospital, Inuvil, who had known the deceased from her childhood days paid a moving tribute. The Rev. Dr. S. Jebanesan preached the sermon. Mrs. Kanapathipillai died in her 93rd year on the 17th May.

### TO OUR READERS

We regret that due to the shortage of News Print we are compelled to print only a limited number of this issue. We request those who receive this to share it with others.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. [illegible] News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Mission Press, 182. 1st Cross Street, Jaffna on Friday the 8th of August 1991 and published by The Rev. G. D. ANANDARAJAN 182 First Cross Street Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org